## சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

### சப்ரகமுவ மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

சபரகமுவ மாகாண அரச சேவையின் கீழ் வெற்றிடமாக உள்ள மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு தகுதியான அதிகாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் நாடு முழுவதும் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | தேவையான தகமைகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | வெற்றிடம் காணப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | சப்ரகமுவ மாகாண ஆயுர்வேத ஆணையாளர் | இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையில் நிர்வாக தரம் 1 அதிகாரியாக இருத்தல் வேண்டும் | 01 | மாகாண ஆயுர்வேத திணைக்களம் சப்ரகமுவ மாகாண சபை |

குறிப்பு – விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதிக்குள் (2024.06.20) குறித்த பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மற்றும் தகைமையை நிரூபிக்கும் அனைத்து சான்றிதழ்களின் நகல் , தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

01.அடிப்படை தகைமைகள்

1. இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையில் நிர்வாக தரம் 1 அதிகாரியாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பித்த நாளுக்கு முந்தைய 05 வருடங்களில் எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படுத்தப்படாத நபராக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பித்த திகதிக்கு முந்தைய 05 வருடங்களில் செயலில் மற்றும் திருப்திகரமான சேவையினை பெற்றிருக்க வேண்டும்.
4. விண்ணப்பித்த திகதிக்கு முந்தைய 05 வருட காலப்பகுதியில் செயற்திறன் மதிப்பீடு , திருப்திகரமான அளவில் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.மேலும் அந்த ஆண்டுகளுடன் தொடர்புடைய அனைத்து சம்பள உயர்வுகளும் பெற்றிருக்க வேண்டும்.
5. சிறந்த குணம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

   குறிப்பு – பதவிக்கு தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பத்தின் இறுதி திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

02. சம்பள அளவுத்திட்டம்

இந்த பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் அ.நி.சு 03/2016 இல் SL 1 – 2016 – ரூ.47,615-10*1335-8*1630 -17*2170 – 110895/- ஆகும்.இந்த சம்பள அளவு திட்டத்தில் 20 ஆவது படிநிலை ஆரம்ப சம்பளமாக அமையும்.

03.வயதெல்லை

ஏற்கனவே அரசுப் பணியில் உள்ள ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளிடம் இருந்து மட்டுமே நாடு முழுவதும் விண்ணப்பங்கள் கோரப்படுவதனால் வயதெல்லைக் கிடையாது.

04.கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்குத் தோன்றுவார்கள். அங்கு மதிப்பெண்கள் சேவை மூப்பு , தகைமை மற்றும் ஆயுர்வேத மருத்துவத்திற்கான சிறந்த பங்களிப்பு மற்றும் நிர்வாகத் திறன் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வழங்கப்படும். அதிக மதிப்பெண்கள் பெற்ற விண்ணப்பதாரர் பதவிக்கு பணியமர்த்தப்படுவார்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மதிப்பெண்கள் பின்வருமாறு வழங்கப்படும்.

சேவை மூப்பு – 50 புள்ளிகள்

தேர்ச்சி - 50 புள்ளிகள்

05.அனைத்து விண்ணப்பப்படிவங்களும் முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்டு 2024.06.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் திணைக்கள தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரின் ஊடாக (மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சு செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன் ) "செயலாளர் , சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி .என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் " சப" விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில்ரகமுவ மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல் " எனக் குறிப்பிடுதல் வேண்டும்குறித்த திகதியின் . பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் ,பதவிக்குரிய தகமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

06.இவ் ஆட்சேர்ப்பு தொடர்பாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல் , இந்த பதிவி தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

07.இதன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் உள்ள அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வழிக்காட்டுதலின் படி ,

ஈசுனீதா.ஏ.கே .,

செயலாளர்,

சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

சப்ரகமுவ மாகாணம்

2024.06.03